செய்தி வெளியீடு எண்.50 நாள் 23.01.2017

**திருவள்ளுர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கத்தில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் ரூ. 01 லட்சத்தி 19 ஆயிரத்தி 235 மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.**

~~~~~

திருவள்ளுர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (23.01.2017) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பொது மக்களின் கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித் தலைவர் பெற்றுக் கொண்டார். மேலும் இக்கூட்டத்திற்கு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வருகை புரிந்த பொதுமக்கள் தங்களது தனிப்பட்ட குறைகளை நிவர்த்தி செய்யவும், உதவிகள் வழங்கிடவும் கோரி மனுக்களை அளித்தனர். இதில் நிலம் சம்பந்தமாக 239 மனுக்களும், சமூக பாதுகாப்பு திட்டம் 76 மனுக்களும், சமூக நலத்திட்டம் 05 மனுக்களும், குடும்ப அட்டை 58 மனுக்களும், ஆதிதிராவிடர் / பிற்படுத்தப்பட்டோர் நலம் 07 மனுவும், வேலைவாய்ப்பு 13 மனுக்களும், உரிமம் 04 மனுக்களும், சட்டம் மற்றும் ஒழுங்கு 09 மனுக்களும், ஊரக / நகர்புற வளர்ச்சி 23 மனுக்களும், கடனுதவி 04 மனுக்களும், வேளாண்மை / கால்நடைத்துறை / மீன்வளம் 21 மனுக்களும், இதரதுறை 14 மனுக்களும், கல்வி 02 மனுக்களும், பேரிடர் 102 மனுக்களும், சான்றிதழ் 11 மனுக்களும், உழவர் பாதுகாப்புத்திட்டம் 01 மனுவும் என மொத்தம் 589 மனுக்கள் பெறப்பட்டது.

இம்மனுக்கள் மீது துரிதமாக நடவடிக்கை மேற்கொள்ளவும், பயனாளிகளுக்கு உதவிடும் வகையில் விரைந்து பரிசீலிக்க வேண்டும் என துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு அலகு சார்பாக, 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண் பெற்று தேர்ச்சி பெற்ற மேற்படிப்பு மேற்கொண்டுவரும் இரு மாணவிகளுக்கு பாராட்டுச்சான்றிதழ் மற்றும் பரிசுத்தொகை தலா ரூ.1,000/-மும், முன்னாள் படைவீரர் நல அலுவலகம் சார்பாக, 6 பயனாளிகளுக்கு மானியத்துடன் கூடிய மற்றும் கல்வி ஊக்கத்தொகை மற்றும் மானியத்துடன் கூடிய வங்கிக்கடனுக்கான காசோலையினையும் (மொத்தம் ரூ.83,375/-), ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு சார்பாக, பணியில் இருக்கும்போது இறந்த முன்னாள் படைவீரர்களின் வாரிசுதாரர்களுக்கு வில்லிவாக்கம், எல்லாபுரம், பூவிருந்தவல்லி ஆகிய ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த 3 நபர்களுக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணிக்கான பணிநியமன ஆணைகளையும், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகம் சார்பாக, 10 பயனாளிகளுக்கு விலையில்லா தையல் இயந்திரங்களையும் (ஒரு தையல் இயந்திரம் விலை ரூ.3,386/-), மாவட்ட வழங்கல் அலுவலகம் சார்பாக 18 நபர்களுக்கு புதிய குடும்ப அட்டைகளையும், உலக சிக்கன நாள் விழா 2016-யை முன்னிட்டு கட்டுரை, பேச்சு, நாடகம் மற்றும் நடனப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகளையும் பாராட்டுச்சான்றிதழ்களையும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) திருமதி.ட்டி.ஆர்.மல்லிகா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சிறுசேமிப்பு) திருமதி.இரா.சரஸ்வதி, மாவட்ட வழங்கல் அலுவலர் திருமதி.வ.சந்தியா, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் திருமதி.எஸ்.ஷர்மிளி மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளுர்.**
~~~~~